வானகரத்தில் நடக்கும் விழாவில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுகிறார்

தமிழக பாஜ புதிய தலைவராக நயினார் இன்று தேர்வு

பொதுக்குழு உறுப்பினர் பதவிக்கு 50க்கும் அதிகமானோர் வேட்பு மனு தாக்கல்

சென்னை, ஏப்.12: தமிழக பாஜவின் புதிய தலைவரை தேர்வு செய்வதற்கான விருப்ப மனு தாக்கலில், நயினார் நாகேந்திரன் மட்டுமே மனுவை சமர்ப்பித்துள்ளதால் புதிய தலைவராக போட்டியின்றி தேர்வாகிறார். சென்னை அடுத்த வானகரத்தில் இன்று மாலை நடைபெறும் விழாவில் தமிழக பாஜவின் புதிய தலைவராக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுகிறார்.

தமிழக பாஜ தலைவர் அண்ணாமலையை மாற்றும் முடிவை அகில இந்திய பாஜ தலைமை எடுத்துள்ளதாக தகவல் வெளியானது. இது தொடர்பான விவாதங்களும் எழுந்தன. அதிமுக உடன் கூட்டணி அமைப்பதில் அண்ணாமலைக்கு உடன்பாடு இல்லாததால் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்ததாக கூறப்படுகிறது. 2023ல் அதிமுக-பாஜ கூட்டணி உடைவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக அண்ணாமலை கருதப்பட்டார்.

இந்த சூழ்நிலையில், 2026 சட்டமன்ற தேர்தலில் தமிழகத்தில் வலுவான கூட்டணியை அமைக்க வேண்டும் என்று பாஜ தேசிய தலைமை விரும்புகிறது. அதற்காக அதிமுகவை தனது வளையத்துக்குள் கொண்டு வர பல்வேறு முயற்சிகளை எடுத்தது. இந்த சூழ்நிலையில் எடப்பாடி பழனிசாமி டெல்லி சென்று அமித்ஷாவை சந்தித்து பேசினார். கூட்டணி தொடர்பாக எந்த முன்னேற்றமும் இல்லை என்றே கூறப்பட்டது. ஆனாலும் கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து கொண்டே இருந்தது.

அதிமுக வைத்த முக்கிய கோரிக்கையே, தமிழக பாஜ தலைவர் பதவியில் இருந்து அண்ணாமலையை மாற்றியே தீர வேண்டும் என்பதாகும். இந்த தகவலை அதிமுக தலைமை, அமித்ஷாவிடம் தெரிவித்ததாக சொல்லப்படுகிறது. இதையடுத்து தமிழக பாஜ தலைவரை மாற்றும் முடிவுக்கு தேசிய பாஜ தலைமை வந்தது. இதை தொடர்ந்து தான், புதிய தலைவர் பதவிக்கான போட்டியில் நான் இல்லை என்று அண்ணாமலை வெளிப்படையாக அறிவித்து விட்டு தலைவர் பதவிக்கான போட்டியில் இருந்து ஒதுங்கினார்.

இதனால், பாஜவின் புதிய தலைவராக யார் தேர்வு செய்யப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு எழுந்த நிலையில், நயினார் நாகேந்திரன் பெயர் பலமாக அடிபட்டது. அதிமுகவில் இருந்து வந்தவர், தென் மாநிலங்களில் செல்வாக்கு கொண்டவர் என்ற அடிப்படையில் நயினார் நாகேந்திரனுக்கு அதிக வாய்ப்பு இருப்பதாகவும் சொல்லப்பட்டது. இதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் நயினார் நாகேந்திரனும் டெல்லி சென்று முகாமிட்டார். கட்சியின் மேலிட தலைவர்களை சந்தித்து தலைவர் பதவி தொடர்பாக ஆலோசனை நடத்துவதாகவும் சொல்லப்பட்டது. அதே நேரத்தில் தென்காசி தொழிலதிபரான ஸ்ரீதர் வேம்பு, மயிலாப்பூர் ஆடிட்டர் ஆதரவுடன் ஆனந்தன் அய்யாச்சாமியும் மாநிலத் தலைவர் பதவி ரேசில் இருந்தார்.

இதனால் அண்ணாமலையை மாற்றி விட்டு வேறு ஒருவரை புதிய தலைவராக நியமிக்க பாஜ மேலிடம் முடிவு செய்தது. இந்த நிலையில் தான் தமிழக பாஜ தலைவர் பதவிக்கான தேர்தல் அறிவிப்பை பாஜ வெளியிட்டது. தமிழக பாஜ தலைவராக போட்டியிட விருப்பம் உள்ளவர்கள் விருப்ப மனு தாக்கல் செய்யலாம் என்று பாஜ தலைமை அறிவித்தது. மேலும், தேசிய பொதுக்குழு உறுப்பினர் பதவிக்கான விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக மயிலாப்பூரில் உள்ள ஆடிட்டர் வீட்டுக்கு அமித்ஷா நேற்று காலை சென்றார். அப்போது ஆனந்தன் அய்யாச்சாமிக்கு உரிய பிரதிநிதித்துவம் பின்னர் வழங்கப்படும். இப்போது நயினாரை அறிவிக்கிறோம் என்று அமித்ஷா கூறி சமாதானப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், தமிழக பாஜ தலைவர் பதவிக்கான விருப்ப மனு தாக்கல் சென்னையிலுள்ள கமலாலயத்தில் நேற்று நடைபெற்றது. போட்டியிட விரும்பமுள்ளவர்கள் தேர்தலுக்கான விருப்ப மனுக்களை கட்சியின் இணையதளமான www.bjptn.com என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து அதை பூர்த்தி செய்து விருப்ப மனுவை நேற்று மதியம் 2 மணி முதல் மாலை 4 மணி வரை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், தமிழக பாஜ தலைவர் பதவிக்கு தேர்தல் விருப்பமனு தொடங்கிய நிலையில் வேறு யாரும் மனுத் தாக்கல் செய்யவில்லை. நயினார் நாகேந்திரன் மட்டுமே விருப்பமனு தாக்கல் செய்தார். அதற்கான மனுவை, தேர்தல் பொறுப்பாளர் சக்கரவர்த்தியிடம் வழங்கினார்.

மேலும், பாஜ தேசிய பொதுக் குழு உறுப்பினர் பதவிக்கு ஒன்றிய இணையமைச்சர் எல்.முருகன் விருப்ப மனு அளித்தார். அதேபோன்று, இந்த பதவிக்கு 50க்கும் மேற்பட்டோர் விருப்ப மனு தாக்கல் செய்தனர்.

நயினார் நாகேந்திரன் விருப்ப மனுவில் அண்ணாமலை, பொன்.ராதாகிருஷ்ணன், வானதி சீனிவாசன், எச்.ராஜா, பொன்.பாலகணபதி, வி.பி.துரைசாமி, கனகசபாபதி ஆகியோர் பரிந்துரை செய்து கையெழுத்திட்டனர்.

இதற்கிடையில், நயினார் நாகேந்திரனுக்கு மட்டுமே விருப்ப மனு தாக்கல் செய்ய கட்சி தலைமை அனுமதி வழங்கியிருந்த நிலையில், தமிழ்நாடு பாஜ தலைவராக நயினார் நாகேந்திரன் போட்டியின்றி தேர்வு செய்யப்படுவது உறுதியாகியுள்ளது. இதன்படி, தமிழ்நாடு பாஜவின் 13-வது தலைவராக நயினார் நாகேந்திரன் தேர்வாகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், தமிழக பாஜ மாநில தலைவர் அறிவிப்பு நிகழ்ச்சி, சென்னை வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸ் திருமண மண்டபத்தில் இன்று நடைபெற உள்ளது.

இதில், பாஜ தேசிய நிர்வாகிகள் கிஷன் ரெட்டி, தருண் சுக் ஆகியோர், தமிழக பாஜ தலைவர் பெயரை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க இருக்கிறார்கள் என்றும், சென்னை ஸ்ரீவாரு திருமண மண்டபத்தில் பாஜ புதிய தலைவர் பதவியேற்பு விழா தேசிய தேர்தல் பொறுப்பாளர் கிஷன் ரெட்டி தலைமையில் மிக பிரமாண்டமாக நடைபெறவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழக பாஜ தலைவர் தேர்தலுக்கு மனுத்தாக்கல் செய்த பின்னர் நயினார் நாகேந்திரன் நிருபர்களிடம் கூறுகையில், "கட்சியின் அறிவுரைப்படி வேட்பு மனு தாக்கல் செய்தேன். 10 ஆண்டு உறுப்பினராக இருந்தால் தான் போட்டியிட முடியும் என்ற விதி குறித்து அதிகாரிகளிடம் தான் கேட்க வேண்டும்" என்றார்.

▶ தி.நகர் பாஜ தலைமை அலுவலகத்தில் கட்சியின் மாநில தலைவர் தேர்தல் நேற்று நடந்தது. இதில் தேசிய பொதுச்செயலாளர் தருண் சுக், மாநில தேர்தல் அதிகாரி சக்கரவர்த்தி, துணை தேர்தல் அதிகாரி மீனாட்சி ஆகியோரிடம் நயினார் நாகேந்திரன் விருப்ப மனு அளித்தார். அருகில், ஒன்றிய அமைச்சர் எல்.முருகன், மாநில தலைவர் அண்ணாமலை, மூத்த நிர்வாகிகள் பொன்.ராதாகிருஷ்ணன், எச்.ராஜா, வானதி சீனிவாசன் உள்ளிட்டோர்.

▶ தமிழக பாஜ புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், கமலாலயத்தில் உள்ள தலைவர் அறையின் முன் வைக்கப்பட்டுள்ள தற்போதைய தலைவர் கே.அண்ணாமலை பெயர் அடிக்கப்பட்டுள்ளது.

விதிகளை தளர்த்தியது ஏன்?

தமிழக பாஜ தலைவர் பதவிக்கான விதிமுறை ஒன்றை கட்சி தலைமை நேற்று முன்தினம் வெளியிட்டது. அதில், தமிழக பாஜ தலைவர் மற்றும் தேசிய பொதுக்குழு உறுப்பினர் பதவிகளுக்கு போட்டியிட விரும்புவோர் 10 ஆண்டுகள் கட்சியின் அடிப்படை உறுப்பினராக இருந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இதனால், அண்ணாமலை, நயினார் நாகேந்திரன் ஆகியோர் போட்டியிட தகுதியை இழந்ததாகக் கூறப்பட்டது. இப்படியொரு விதி இருக்கும்போது அண்ணாமலை எப்படி தலைவரானார், புதிய தலைவர் யார்தான் என எண்ணற்றக் கேள்விகள் எழுந்தன. ஆனால், விதிகள் மாற்றப்பட்டுவிட்டதாக இன்று பாஜ தேர்தல் பொறுப்பாளர் சக்கரவர்த்தி அறிவித்தார்.

நயினாருக்கு அண்ணாமலை எதிர்ப்பு

சென்னையில் ஆடிட்டர் ஒருவரின் இல்லத்தில் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா, ஒன்றிய இணையமைச்சர் எல்.முருகன், அண்ணாமலை ஆகியோர் தமிழக பாஜ தலைவர் பதவி குறித்து ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது. இதில் தமிழக பாஜ தலைவராக நயினார் நாகேந்திரனை கொண்டு வருவதில் ஆர்எஸ்எஸ் தயக்கம் காட்டி வந்ததாக கூறப்படுகிறது. அதேபோன்று, அண்ணாமலையும், நயினாருக்கு எதிர்ப்பு தெரிவித்ததாக சொல்லப்படுகிறது. ஆனால் நயினார் நாகேந்திரனுக்கு ஆதரவாக அமித்ஷா இருந்ததாக கூறப்படுகிறது. இதை தொடர்ந்தே, கமலாலயம் வந்த நயினார் நாகேந்திரன் அலுவலக வாசலை தொட்டு வணங்கியது குறிப்பிடத்தக்கது. தேர்தல் முடிவு 4 மணிக்கு அறிவிக்கப்படும் தமிழக பாஜ தேர்தல் அதிகாரி சக்ரவர்த்தி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:தமிழக பாஜ தலைவர் மற்றும் தேசிய பொதுக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு விருப்ப மனுக்கள் கமலாலயத்தில் நேற்று பெறப்பட்டது. மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் 10 பேர் கையெழுத்திட்ட பல விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அனைத்து விண்ணப்பங்களுமே கட்சியின் சட்டமன்ற குழுத் தலைவர் நயினார் நாகேந்திரனையே முன்மொழிந்துள்ளது. வேறு யாரையும் முன்மொழிந்து எந்த விண்ணப்பங்களும் பெறப்படவில்லை. மேலும், மாநில தலைவர் அண்ணாமலை, முன்னாள் மாநில தலைவர்கள் பொன்.ராதாகிருஷ்ணன், எல்.முருகன், தேசிய செயற்குழு உறுப்பினர் எச்.ராஜா, அகில இந்திய மகளிர் அணி தலைவி வானதி ஸ்ரீனிவாசன் உள்ளிட்ட நிர்வாகிகளும் நயினார் நாகேந்திரனை ஒரு மனதாக தலைவர் பதவிக்கு முன்மொழிந்தனர். ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில தலைவர் மற்றும் தேசிய பொதுக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் முடிவானது இன்று மாலை 4 மணி அளவில் சென்னை வானகரம் ஸ்ரீவாரி கல்யாண மண்டபத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முதல்வருக்கு எஸ்டிபிஐ நிர்வாகிகள் நன்றி

▶ சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று, எஸ்டிபிஐ கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக், துணை தலைவர்கள் உமர் பாரூக், அப்துல்ஹமீத், நிர்வாகிகள் அப்துல் கரீம், அபூபக்கர் சித்திக், அமீர் ஹம்சா உள்ளிட்டோர் சந்தித்தனர். அப்போது, ஒன்றிய அரசின் வக்பு சட்ட திருத்த முன்வடிவை முழுமையாக திரும்ப பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அரசினர் தனி தீர்மானத்தை நிறைவேற்றியதற்கு நன்றி தெரிவித்தனர். அருகில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எம்பிக்கள் டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன், ஆ.ராசாஉள்ளிட்டோர்.

அண்ணா பல்கலை. தொழில் நிறுவன கோட்டாவில் மாணவர் சேர்க்கை

சென்னை, ஏப். 12: தமிழகத்தில் இன்ஜினியரிங் படிப்புகளில் சேர்க்கை பெறுவதற்கு மாணவர்கள் ஆர்வத்துடன் விண்ணப்பித்து வருகின்றனர். இன்ஜினியரிங் சேர்க்கையானது 12ம் வகுப்பில் கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் நடைபெறும்.

அதேநேரம், அண்ணா பல்கலைக்கழகத்தின் வளாக கல்லூரிகளான கிண்டி இன்ஜினியரிங் கல்லூரி, அழகப்பா தொழில்நுட்ப கல்லூரி, மெட்ராஸ் தொழில்நுட்ப கல்லூரி, கட்டிடக் கலை மற்றும் திட்டமிடல் கல்லூரிகள் ஆகியவற்றில் தொழில் நிறுவன கோட்டா அடிப்படையிலும் சேர்க்கை நடைபெறும்.

ஒரு தொழில் நிறுவனம் ஒரு மாணவரை, நாங்கள் படிக்க வைத்து, நாங்களே வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம் என ஸ்பான்சர்ஷிப் செய்யும் நிலையில் சேர்க்கை வழங்கப்படும்.

இந்த நிலையில், தொழில்நிறுவன கோட்டாவின் கீழ் மாணவர் சேர்க்கைக்காக பி.இ., பி.டெக்., பி.பிளான் படிப்புகளில் சேர விரும்புபவர்கள் ஏப்ரல் 4 முதல் ஜூன் 9 வரை https://cfa.annauniv.edu/cfa/ என்ற இணையதளப் பக்கம் மூலமாக விண்ணப்பிக்கலாம்.

गणितीय विज्ञान संस्थान, चेन्नई
THE INSTITUTE OF MATHEMATICAL SCIENCES, CHENNAI
(परमाणु ऊर्जा विभाग, भारत सरकार)
(Department of Atomic Energy, Govt. of India)

अप्रैल/April 11,2025

विज्ञापन संख्या / Advt No.3-R/IMSc/2025

गविसं समेकित वेतन पर पूरी तरह से अनुबंध के आधार पर परियोजना पदों और पुस्तकालय प्रशिक्षुओं को भरने के लिए आवेदन आमंत्रित कर रहा है। अधिक जानकारी के लिए, कृपया हमारी वेबसाइट https://www.imsc.res.in/other_positions के "अवसर पृष्ठ" पर जाएँ।

IMSc is inviting applications for filling up of ***Project Positions & library Trainee*** purely on contract basis on consolidated salary. For more details, please visit " Opportunities Page" Of our website **https://www.imsc.res.in/other positions**

Sd/-
कुलसचिव /REGISTRAR

SDAT
SPORTS DEVELOPMENT AUTHORITY OF TAMIL NADU
JAWAHARLAL NEHRU STADIUM, RAJA MUTHIAH ROAD, PERIYAMET, CHENNAI – 3

Notice Inviting e-Tender
e-tender ref no. 721159/SI-1/2024, Date:.12.04.2025

e-bids are invited for the following work by the Member Secretary, Sports Development Authority of Tamil Nadu, Jawaharlal Nehru Stadium, Raja Muthiah Road, Periyamet, Chennai-600 003 under two cover system.

1.	Establishment of 50Mx25M Swimming Pool with Diving Pool arrangements at District Sports Complex, Madurai (Two cover system)	
3.	**Earnest Money Deposit required**	**Rs.6,23,000/-**
4	Pre-bid meeting on : 25.04.2025 at 12.30 Noon in the O/o The Member Secretary, Sports Development Authority of Tamil Nadu, Jawaharlal Nehru Stadium, Raja Muthiah Road, Periyamet, Chennai – 600003.	
5.	**Last date for submission of online tender**	**12.05.2025 at 3.00 P.M**
6.	**Date of opening of technical bids**	**13.05.2025 at 3.00 P.M**
7.	**Period of Contract**	**365 Days**

Tenders available at **https://tntenders.gov.in** All further information/notices shall be published in e-procurement portal only.

DIPR/1471/Tender/2025
(Sd/)
Member Secretary, SDAT.

பெருநகர சென்னை மாநகராட்சி
பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை

பூ.து.ந.க.எண். பி2/0524/2025
இரட்டை உறை முறையில் மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு

கண்காணிப்பு பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம் - 6, 7, 10, 11, 12, 13, 14, 15 உள்ள 158 எண்ணிக்கையிலான பூங்காக்கள் பழுதுபார்க்கும் மற்றும் மேம்படுத்தும் பணிகள் (சிப்பம் 10 முதல் 17) (Two Cover System) பணியின் மதிப்பு ரூ. 86.71 முதல் ரூ. 191.62 இலட்சங்கள் வரை

முன்வைப்பு தொகை :- மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%
ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **05.05.2025 அன்று மாலை 3.00 மணி வரை**
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **06.05.2025 அன்று மாலை 3.30 மணி**
மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 1515 / ஒப்பந்தப்புள்ளி / 2025
கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி)

TAMILNADU MEDICAL SERVICES CORPORATION LTD.
No.417, Pantheon Road, Egmore, Chennai-600008.
Phone:28191890/28190259; Fax: 044 -28190636

Sl. No	Online Tender no with qty./ Document Cost	Sale Period	Pre bid	Submission	Opening
1	E1307/DIET/RC/TNMSC/ENGG/2025, dt:11.04.2025 – Fixing rate contract for providing various types of Diets to Patient at Tamil Nadu Govt., Multi Super Specialty Hospital, Chennai and Kalaingnar Centenary Super Specialty Hospital, Chennai – Rs. 5,725/-	12.04.2025 to 21.04.2025	16.04.2025 11.00 AM	22.04.2025 11.00 AM	22.04.2025 12.00 Noon
2	E1308/COURIER/RC/TNMSC/ENGG/2025, dt:11.04.2025 – Fixing Rate contract for Courier & Cargo services to TNMSC Ltd.– Rs. 5,725/-	12.04.2025 to 28.04.2025	17.04.2025 11.00 AM	29.04.2025 11.00 AM	29.04.2025 12.00 Noon
3	E1309/VEH/DME/TNMSC/ENGG/2025, dt:11.04.2025 – Mobile Dental Van (2) .– Rs. 5,725/-	12.04.2025 to 28.04.2025	17.04.2025 11.30 AM	29.04.2025 11.00 AM	29.04.2025 12.00 Noon
4	E1310/FC/RC/TNMSC/ENGG/2025, dt:09.04.2025 – All in one Diabetic Foot clinic(14), Hand Held Doppler (20) – Rs. 5,725/-	16.04.2025 to 05.05.2025	23.04.2025 11.00 AM	06.05.2025 11.00 AM	06.05.2025 12.00 Noon
5	E1311/FUR/RC/TNMSC/ENGG/2025, dt:11.04.2025 – Heavy Duty Racks (210), Hydraulic Hand Pallet Trolleys (18), Polyurethane base pallets (300), Semi Electric battery operated Stackers (6) – Rs. 5,725/-	16.04.2025 to 05.05.2025	23.04.2025 11.30 AM	06.05.2025 11.00 AM	06.05.2025 12.00 Noon
6	E1312/VIA/RC/TNMSC/ENGG/2025, dt:11.04.2025 – VIA/VILI Kit (1480), Magnavision Lamp (1570) – Rs. 5,725/-	17.04.2025 to 05.05.2025	25.04.2025 11.00 AM	06.05.2025 11.00 AM	06.05.2025 12.00 Noon
7	E1313/CONSUMABLES/RC/TNMSC/ENGG/2025, dt:11.04.2025 – Oxygenator – Neonatal and Infant (150), Oxygenator - pediatric (100), Oxygenator – Semi Adult (50), – Rs. 5,725/-	17.04.2025 to 05.05.2025	25.04.2025 11.30 AM	06.05.2025 11.00 AM	06.05.2025 12.00 Noon
8	E1314/VEH/RC/TNMSC/ENGG/2025, dt:11.04.2025 – Factory ready built "C" type ambulance (80), Vehicle for Hearse Service (35), Vehicle for Drop back Service (50), – Rs. 5,725/-	21.04.2025 to 21.05.2025	05.05.2025 11.00 AM	22.05.2025 11.00 AM	22.05.2025 12.00 Noon
9	E1315/ANS/RC/TNMSC/ENGG/2025, dt:11.04.2025 – Boyles Apparatus -3 Gas (35), Boyles Apparatus -2 Gas(12) – Rs. 5,725/-	21.04.2025 to 06.05.2025	28.04.2025 11.00 AM	07.05.2025 11.00 AM	07.05.2025 12.00 Noon
10	E1316/ANS/RC/TNMSC/ENGG/2025, dt:11.04.2025 – OT Table Hydraulic (102) – Rs. 5,725/-	21.04.2025 to 06.05.2025	28.04.2025 11.30 AM	07.05.2025 11.00 AM	07.05.2025 12.00 Noon
11	E1317/ANS/RC/TNMSC/ENGG/2025, dt:11.04.2025- Laminar Air Flow unit - Wooden (10), Laminar Air Flow unit - MS (22)– Rs. 5,725/-	22.04.2025 to 07.05.2025	29.04.2025 11.00 AM	08.05.2025 11.00 AM	08.05.2025 12.00 Noon
12	E1318/RVG/RC/NHM/TNMSC/ENGG/2025, dt: 11.04.2025 - Radio Vision Graphy (60) – Rs. 5,725/-	22.04.2025 to 07.05.2025	29.04.2025 11.30 AM	08.05.2025 11.00 AM	08.05.2025 12.00 Noon

For details visit **www.tntenders.gov.in** and TNMSC website **www.tnmsc.tn.gov.in**

DIPR/1507/TENDER/2025
GENERAL MANGER (EQUIPMENT)

அமைச்சர் பொன்முடியின்...

முதல் பக்க தொடர்ச்சி

சமூகவலைதள பதிவில் வெளியிட்டுள்ள செய்தியில், "அமைச்சர் பொன்முடியின் சமீபத்திய பேச்சு ஏற்றுக்கொள்ள முடியாதது. எந்த காரணத்திற்காக பேசப்பட்டிருந்தாலும் இப்படிப்பட்ட கொச்சையான பேச்சுகள் கண்டிக்கத்தக்கது" என்று பதிவிட்டிருந்தார்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில், அமைச்சர் பொன்முடியின் கட்சி பதவியை பறித்து திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

அதில், "கழக துணை பொதுச்செயலாளர் க.பொன்முடி, அவர் வகித்து வரும் துணை பொதுச்செயலாளர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுகிறார்" என அதிரடியாக அறிவித்தார்.

திமுக பொதுக்கூட்ட மேடைகளில் அமைச்சர் பொன்முடியின் பேச்சு தொடர்ந்து சர்ச்சையாகி வருகின்றது. ஏற்கெனவே பெண்கள் இலவச பேருந்து சேவை தொடர்பாக பொன்முடி பேசியது பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இதனிடையே, சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைத்தண்டனை பெற்ற பொன்முடி தனது பதவியை ராஜினாமா செய்திருந்தார்.

உச்சநீதிமன்றம் தண்டனையை நிறுத்தி வைத்ததை தொடர்ந்து மீண்டும் அமைச்சராக பொறுப்பேற்றார் பொன்முடி. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தில் பொன்முடியிடம் இருந்த உயர்கல்வித்துறை பறிக்கப்பட்டு, வனத்துறை ஒதுக்கப்பட்டது. தற்போது அவரது பேச்சுக்காக கட்சி பதவியை அதிரடியாக பறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலினின் அதிரடி நடவடிக்கை கட்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

துணை பொதுச்செயலாளரானார் திருச்சி சிவா

பொன்முடி நீக்கப்பட்டதை அடுத்து, திருச்சி சிவா எம்பி துணை பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து, திமுக தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள மற்றொரு அறிவிப்பில், "கழக கொள்கை பரப்பு செயலாளராக பொறுப்பு வகித்து வரும் திருச்சி சிவா எம்பி, அப்பொறுப்பில் இருந்து விடுவித்து, திமுக துணை பொதுச்செயலாளராக நியமிக்கப்படுகிறார்" என்று கூறியுள்ளார். இதையடுத்து நேற்று சென்னை அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை திருச்சி சிவா எம்பி சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா, தயாநிதி மாறன் எம்பி, அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தனர்.

சென்னை வந்த அமித்ஷாவை கண்டித்து

கருப்பு ரிப்பன் கட்டிய புறாவை பறக்க விட்டு காங்கிரசார் ஆர்ப்பாட்டம்

உருவ பொம்மையை எரித்ததால் 250 பேர் கைது

சென்னை, ஏப்.12: ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா 2 நாள் சுற்றுப்பயணமாக தமிழகம் வந்துள்ளார். இந்நிலையில் தமிழகத்துக்கு நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டுவதாக குற்றம் சாட்டியும், நாடாளுமன்றத்தில் அம்பேத்கர் பற்றி அவதூறாக பேசியதாகவும், தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வருவதற்கு கண்டனம் தெரிவித்தும் தமிழக காங்கிரஸ் சார்பில் கருப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை அறிவித்தார்.

அதன்படி, செல்வப்பெருந்தகை தலைமையில் மயிலாப்பூரில் அம்பேத்கர் பாலம் (சிட்டி சென்டர் அருகில்) கருப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நேற்று நடந்தது. அப்போது, உள்துறை அமைச்சர் அமித்ஷாவே திரும்பிப் போ என்றும் ஒன்றிய பாஜ அரசை கண்டித்தும் காங்கிரஸ் கட்சியினர் கருப்புக் கொடி ஏந்தி கோஷங்களை எழுப்பினர். மேலும், அமித்ஷாவை கண்டித்து, காங்கிரஸ் கட்சியினர் கருப்பு ரிப்பன் கட்டிய புறாவை பறக்க விட்டு எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில், கிராம கமிட்டி சீரமைப்பு குழு தலைவர் பீட்டர் அல்போன்ஸ், அசன் மவுலானா எம்எல்ஏ, துணைத் தலைவர்கள் சொர்ணா சேதுராமன், கோபண்ணா, பொதுச்செயலாளர்கள் தளபதி பாஸ்கர், காண்டீபன், டி.செல்வம், அமைப்பு செயலாளர் ராம் மோகன், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி பொறுப்பாளர் தாம்பரம் நாராயணன், திருவான்மியூர் மனோகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில், ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவின் உருவபொம்மையை எரித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட செல்வப்பெருந்தகை உள்பட 250 பேரை போலீசார் கைது செய்து அருகில் உள்ள சமூக நலக் கூடத்தில் வைத்தனர். மாலையில் அவர்களை விடுவித்தனர்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் பூனவாலா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். என அறியப்பட்டது)
பதிவு அலுவலகம்: 6–வது தளம், B கட்டிடம், கங்கா ட்ரூனோ, லோஹிகான், புனே, மகாராஷ்டிரா 411014, கிளை அலுவலக அலகு: தரைதளம், 2ஆவது பாகம், ஈவன்ஸ் வளாகம், 14 பேலஸ் சாலை, நாகர்கோவில் 629001, கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு.
மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 & 9–ன் கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.
இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது முன்னர் ஜீ பணி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் அன்லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) இதற்குப்பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப